1980 ஆகஸ்ட் 1]

வக்பு போர்டு.

*வினா எண். 95— திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது உள்ள வக்பு போர்டை மாற்றியமைக்கும் யோசனை அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, இந்த வக்பு போர்டு எந்த ஆண்டு நிறுவப்பட்டது? அதன் தலைவராக யார் இருக்கிறார்? அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையீடு அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இப்போது செயல்பட்டு வருகிற வக்பு போர்டு 26-6-1978-ல் அமைக்கப்பட்டது. அதனுடைய தலைவராக திரு. சையது யூசுப் இருக்கிறார். அதை நியமித்த காலத்திலிருந்தே அரசியல் ரீதியில் சிலர், வக்பு வாரியம் செயல்படுவதற்கு முன்னர் இருந்தே, சரியல்ல என்று புகார் செய்திருக்கிறார்கள், அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த வக்பு வாரியம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது; ஆகவே நடவடிக்கை தேவையில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, இந்த வக்பு வாரியத்தின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அடிப்படை தகுதி என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, வக்பு வாரியத்தினுடைய உறுப்பினராக இருப்பதற்கு இன்னின்ன தகுதிகள்தான் இருக்கவேண்டுமென்றில்லை. அவர் பொதுவாழ்வில் தவறு இழைக்காதவராகவும், மற்ற குற்றங்கள் இழைக்காதவராகவும் இருந்தால் போதும். இரண்டாவதாக, மத சம்பந்தப்பட்ட அடிப்படையில் அதிலே நம்பிக்கை வைத்து அந்த சமுதாய வளர்ச்சியில் அக்கறை உடையவராக இருக்க வேண்டும்.

திரு. எல். இளயைபெருமாள். தலைவர் அவர்களே, இந்த வக்பு போர்ட் சம்பந்தப்பட்ட மொத்த சொத்து எவ்வளவு? அதைப் பராமரிக்குமாறு இவர்களுக்கு உத்தரவு போட்டுள்ளதா? சிலநிலங்களைத் தவறுகப் பயன் படுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, வக்பு வாரியத்தினுடைய முக்கியமான பணி எங்கெங்கே புரவலர்களால் அல்லது பொதுமக்களால் பொது நன்மைக்காக தங்கள் சொத்துக்களை எழுதிவைக்கிறார்களோ, அவைகளை பராமரிப்பதாகும். அந்தந்த பகுதிகளில் அந்த சொத்துக்களை பராமரிக்க முத்தவல்லி நியமிக்கப்பட்டிருக்கிறார். சொத்துக்களை எழுதி வைத்தவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அவர்கள் பராமரித்து வருகிறார்கள். அந்த முறையில் அவர்கள் சரியாக பராமரிக்கிறார்களா என்பதை கண்காணிப்பதுதான் இந்த வாரியத்தின் பணியே தவிர. வேறு எந்த அதிகாரமும் இல்லை. ஒரு வேளை அந்தவக்பு நாமாவுக்கு விரோதமாக முத்தவல்லி செயல்பட்டால் வக்பு வாரியம் தலையிட்டு, அந்த முத்தவல்லியை மாற்றி அல்லது அவர்மீது வேறு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த வக்பு போர்டு பல முறைகேடுகள் செய்ததால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, கலைக்கப்பட்டது. அது இப்போது என்ன நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, 1976 ஆம் ஆண்டு அக்டோபர் 19-ந்தேதி தான் ஒரு வக்பு போர்டு ஆளுநர் ஆட்சி இருந்தபோது அமைக்கப்பட்டது. அந்த வாரியத்தின் உறுப்பினர்கள் பதவி காலம் முடிவடைவதற்கு முன்னாலேயே 1978-ல் இராஜிநாமா செய்து விட்டார்கள். அந்த இடங்களில் புதிய அங்கத்தினர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஆண்டிலிருந்த வக்பு வாரியம் என்று குறிப்பிட்டுச் சொன்னால் பதில் அளிக்க முடியும். ஏனென்றால் இது குற்றச்சாட்டு, இப்போது செயல்பட்டு வரும் வாரியத்தின் மீது குற்றச்சாட்டு எதுவும் இல்லை. இந்த வாரியத்திற்கு முந்தைய வாரியத்திற்கு முந்தைய வாரியம் அல்லது இந்த ஆண்டு என்று சொன்னால் விளக்கமாக பதில் சொல்லலாம்.

[முற்பகல் 9-10]

திரு. கோவைத்தம்பி: தலைவரவர்களே, மாநில அளவில் இருக்கின்ற வக்ப் போர்ட் மண்டல அளவில் அல்லது மாவட்ட அளவில் பிரித்து கொடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1980 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, வக்ப் வாரியத்தினுடைய சமீப காலப் பணிகளை கணக்கில் கொண்டு பார்க்கிறபோது மண்டல வாரியாக ஆங்காங்கே ரீஜினல் கமிட்டி ஒன்றை அமைத்தால் ஆங்காங்கே வரக்கூடிய வழக்குகளை உடனுக்குடன் அங்கே விசாரித்து தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற ஒரு பொதுவான கருத்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இது குறித்து ஆலோசனை செய்து அப்படி ஒரு மண்டல கமிட்டி அதாவது ரீஜினல் கமிட்டி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்து அரசுக்கு தகவல் தரும்படி வக்ப் வாரியத் தலைவரை நாம் கேட்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு ஒருவேளை அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது என்று வக்ப் வாரியம் உணர்ந்தால் நிச்சயமாக அதைச் செய்வதற்கு அரசு உறுதுணையாக இருக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, வக்ப் வாரியம் பல கோடி ரூபாய்ச் சொத்துக்களைப் பராமரித்து வருகின்றது. ஆனால் இந்து அறநிலையத்துறை பற்றி ஆண்டு தோறும் இந்த அவையிலே விவரங்கள் வைக்கப்படுகின்றன. அதே சமயத்தில் வக்ப் வாரியத்தின் நடவடிக்கைகளைப் பற்றியும் ஆண்டுதோறும் ஒரு விவரமான அறிக்கை இந்த மன்றத்திற்கு அளிக்கின்ற வகையில் அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இதற்கென்று தனியாக மானியக் கோரிக்கை இல்லாத காரணத்தாலேதான் பொதுவாக இது அந்த மானியத்தோடு சேர்ந்து வருகின்றது. ஆகவே அப்போது பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றிய கருத்தைத் தெரிவித்திருக்கலாம். ஆனால் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைத்தான் சொல்லி இருக்கிறார்கள். இனிமேல் வக்ப் வாரியத்தினுடைய பணிகள் பற்றியும், அதனுடைய சாதனைகள் பற்றியும் அல்லது அதற்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் பற்றியும் ஆகிய எல்லாவற்றையும் அடக்கிய ஒரு அறிக்கை ஆண்டுக்கு ஒரு முறை இந்த அவையிலே வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, வக்ப் வாரியத்தினுடைய தலைவர் அந்த முஸ்லீம் கோட்பாடுகளிலே முழு நம்பிக்கை உடையவராக இருக்க வேண்டும என்று ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் அதனுடைய தற்போதைய தலைவர் திரு. சையத் யூசுப் அவர்கள் அந்தக் கோட்பாடுகளுக்கு மாறாக நவராத்திரிகொலு போன்றவைகளை எல்லாம் நடத்துகிறார் என்று பத்திரிகைகளிலே பரவலாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றனவே. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றதா ? அப்படியானால் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பகுத்தறிவுக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு கருத்தை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். பல அரசியல் மாச்சரியங்களின் காரணமாக வக்ப் போர்ட் தலைவர் மீது சிலபேர் தவறான தகவல்களைக் கொடுத்து இருக்கிறார்கள். நாம் மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருக்கிறோம். வட நாட்டிலே இருக்கின்ற முஸ்லீம் ஒருவர் கூட இந்துக் கோயில்களுக்கு தமது நிலங்களை எழுதிக் கொடுத்திருக்கின்றார். ஆகவே மற்ற மதங்களின் விழாக்களுக்குச் செல்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு இந்தக் கோட்பாட்டிலே நம்பிக்கை இல்லை என்று சொல்கின்ற அந்தப் போக்குகளை நாம் தயவு செய்துஉற்சாகப்படுத்தி விடக்கூடாது. நூற்றுக்குநூறு தகுதியும், இந்தக் கோட்பாட்டிலே முழு நம்பிக்கையும் கொண்டு நடந்து வருகின்ற ஒருவரைத்தான் இந்த வக்ப் வாரியம் தலைவராகப் பெற்றிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இந்த மதத்தில் நம்பிக்கை உடையவர்கள்தான் வக்ப் வாரியத்திலே அங்கத்தினர்களாக அங்கம் வகிக்கிறார்கள் என்று சொன்னார்கள், ஆனால் இந்து அறநிலையத்துறையைபொறுத்தவரையில் மத நம்பிக்கையற்றவர்களை நியமிக்கின்றார்களே, அதற்கென்ன காரணம்? ஆகவே இதிலேயும் மத நம்பிக்கையற்றவர்களைப் போடக் கூடாதா என்று அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இதற்கு நான் பதில் சொல்வது முறையாக இருக்காது என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி தொகுதியிலுள்ள தோவாளைக் கால்வாய்.

*வினா எண். 96— திரு. சு முத்துக்கிருஷ்ணன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதியில் உள்ள தோவாளை சானலில் சேதமடைந்துள்ள கரைகளும், மதகுகளும் சரி செய்யப்படாமல் உள்ளதா?

(ஆ) இதற்கு நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோவாளைக் கால்வாயின் சேதமடைந்த கரைகளும் மதகுகளும் ரூ. 4,51,270 செலவில் செப்பனிடப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் விடப்பட்டுள்ளது.